

# பனிமயம்

ஏப்ரல் 2021

ஆண்டுச் சந்தா
ரூ. 50/-

தனிப் பிரதி
விலை ரூ. 5/-



## பனிமயத் தாயின் பாதத்திலிருந்து...

உங்கள் அனைவருக்கும் பனிமயத் தாயின் இனிய பெயரில் வாழ்த்துகள்!

உயிர்த்த இயேசு தரும் அமைதியும், மகிழ்ச்சியும் உங்கள் அனைவரோடும் இருப்பதாக.

கொரோனா பெருந்தொற்று இந்த உலகை அச்சுறுத்தத் தொடங்கி ஓர் ஆண்டு நிறைவுபெறுகிறது. இருப்பினும், உலகின் சில பகுதிகளிலும், இந்தியாவின் சில மாநிலங்களிலும் தொற்று மீண்டும் அதிகரிக்கத் தொடங்கியிருப்பது நம்மை மீண்டும் அச்சத்திலும், இயல்பு வாழ்வு மீண்டும் பாதிக்கப்படுமோ என்ற ஐயத்திலும் தள்ளியிருக்கிறது. இந்தப் பின்புலத்தில் நாம் இயேசுவின் பாடுகளையும், இறப்பையும், அதைத் தொடர்ந்து நிகழ்ந்த உயிர்ப்பையும் நினைவுகூர்கின்றோம்.

இயேசுவின் மீட்புப் பணியைப் பற்றிப் பேசும் எபிரேயர் திருமடல் அவர் “வாழ்நாள் முழுவதும் சாவு பற்றிய அச்சத்தினால் அடிமைப்பட்டிருந்தவர்களை விடுவித்தார்” (எபி 2:15) என்று இயேசுவைப் போற்றுகிறது. ஆம், அன்புக்குரியவர்களே, கோவிட்19 நோய் பற்றிய அச்சத்தினால் அடிமைப்பட்டிருக்கும் அனைவருக்கும் இயேசுவின் உயிர்ப்பு புதிய நம்பிக்கையையும், நலவாழ்வையும் தரவேண்டுமென்று பனிமயத் தாயை மன்றாடுகிறேன்.

இம்மாத முதல் சனி **03.04.2021** பெரிய சனியாக இருப்பதன் காரணமாக, நமது திருத்தலத்தில் இம்மாதம் முதல் சனி நவநாள் வழிபாடு, சப்பரப் பவனி ஆகியன நடைபெறாது.

இம்மாதம் **6**ஆம் நாள் தமிழகத்தின் எதிர்காலத்தைத் தீர்மானிக்கும் சட்டமன்றத் தேர்தல் நடைபெறவிருக்கிறது. தேர்தல் நேர்மையாக நடைபெறவும், ஞானம் நிறைந்த தலைவர்கள் தேர்ந்தெடுக்கப்படவும் மன்றாடுவோம். அத்துடன், தேர்தல் நாளில் தவறாது வாக்களித்து, நம் சனநாயகக் கடமையையும் நிறைவேற்றுவோம்.

சாவையும், தீமைகளையும் வென்ற வெற்றி வீரராம் கிறிஸ்துவை ஈன்ற பனிமயத் தாயின் ஆசி உங்களோடு இருப்பதாக!

என்றும் அன்புடன்,
**அருள்பணி. குமார்ராஜா**
பங்குத் தந்தை & திருத்தல அதிபர்



உதயம் 21 தாரகை 8

பனிமயம்

நிர்வாகி & வெளியிடுபவர்
அருட்பணி. குமார்ராஜா
அதிபர் மற்றும் பங்குத்தந்தை,
தூய பனிமய அன்னை பேராலயம்,
தூத்துக்குடி

ஆசிரியர்:
அருட்பணி. குமார்ராஜா

**பனிமயம் விளம்பர விபரங்கள்**

| | | |
|---|---|---|
| அரைப்பக்க விளம்பரம் | - | ரூ. 500/- |
| முழுப்பக்க விளம்பரம் | - | ரூ. 1000/- |
| பின் பக்க அட்டை உட்புற விளம்பரம் | - | ரூ. 1500/- |
| பின் பக்க அட்டை வெளிப்புற விளம்பரம் | - | ரூ. 2000/- |

வடிவமைத்து, அச்சிட்டோர்
R. சதீஷ் குமார்
ஷைனி ஆப்செட் பிரிண்டர்ஸ்
41C, பெரைரா தெரு, தூத்துக்குடி-1

ஆண்டுச் சந்தா ரூ. 50

முகவரி : 'பனிமயம்'
தூய பனிமய அன்னை பேராலயம்
42, கடற்கரை வீதி, தூத்துக்குடி-628 001.
0461-2320854, 2330147, www.snowsbasilica.com

## இம்மாதத்திற்கான திருத்தந்தையின் செபக்கருத்து

### அடிப்படை உரிமைகள்

சர்வாதிகாரங்கள், சர்வாதிகார ஆட்சிகள் மற்றும் நெருக்கடியில் இருக்கும் ஜனநாயக நாடுகளின் கீழ் அடிப்படை உரிமைகளுக்காக போராடும்போது தங்கள் உயிரைப் பணயம் வைப்பவர்களுக்காக மன்றாடுவோம்.

# உள்ளே...

1. பனிமய அன்னை ....................4
திி. சொர்ணராஜன் விக்டோரியா

2. பேராலய வரலாறு ....................6
செல்வராஜ் மிராந்தா

3. பனிமயம் - மீள்பார்வை ....................8
கலாபன் வாஸ்

4. அன்னையின் ஏழு துயரங்கள்! ....................10
அருள் மரி வேந்தன்

5. அழகின் முழுமையே தாயே ....................12
அருள்பணி. ஸ்டார்லின் ச.ல.

6. மரியன்னை புனிதர்கள் :
புனித ஐரனேயஸ் ....................14
அருள்பணி. குமார்ராஜா

7. வியாகுல அன்னை ....................16
அருள்பணி. பென்சிகர் லூசன்

8. விவிலியப் போட்டி ....................18

9. மாதம் ஒரு மாதா படம் ....................21

10. பனிமயப் பகிர்வு ....................22

பனிமய அன்னை 6

# தொடர்ந்து

# இயேசு சபையினர் பணி



தூத்துக்குடியில் சவேரியார் சவேரியார் முத்துக்குளித்துறையில் தனது மறைப் பணியின்போது தமிழ் மொழிபெயர்ப்பில் தமக்கு உதவுவதற்காக, குருத்துவம் பயின்று கெண்டிருந்த மூன்று பரவ குல மாணவர்களையும் தன்னுடன் முத்துக் குளித்துறைக்கு அழைத்து வந்தார். அவர்கள் **மனுவேல்** (Manuel), **கஸ்பார்** (Gaspar) **பிரான்சிஸ் கொய்லோ** (Francis Coelho) ஆவார். மூவரில் மனுவேலும், கஸ்பாரும், திருத்தொண்டர்கள் (Deacons) மற்றும் மூன்றாமவர், இளநிலை மாணவராகும். இவர்கள் மூவரும் முத்துக்குளித்துறையின் தூத்துக்குடியைச் சேர்ந்தவர்கள். 1544-ஆம் ஆண்டில், கஸ்பார், மனுவேல் அருட்பணி யாளர்களாகத் திருநிலைப்படுத்தப்பட்டனர். இவர்கள்தான் பரவ குலத்தின் முதல் அருட்பணியாளர்கள்.

1542 ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் **புனித சவேரியார்** முத்துக்குளித்துறையின் தூத்துக்குடிக்கு வந்து சேர்ந்தார். தூத்துக்குடி புனித இராயப்பர் கோவில் பங்குக்குரு **பேதுரு கொன்சால்வஸ்** சுவாமிகளும், தூத்துக்குடி மக்களும் சவேரியாரை அன்புடன் வரவேற்றனர். இது குறித்து சவேரியார் 1542 ஆம் ஆண்டு அக்டோபர் 28 ஆம் நாளன்று தூத்துக்குடியிலிருந்து புனித இஞ்ஞாசியாருக்கு எழுதிய மடலில் விவரித்துள்ளார்.

புனித சவேரியார் கோவா மறைமாநில ஆயரின் ஆளுகையின் கீழ், முத்துக்குளித்துறையில் தூத்துக்குடியைத் தமது தலைமையிடமாகக் கொண்டு தமது மறைப்பணியைத் தொடங்கினார்.

1544 ஆம் ஆண்டு ஜனவரி 15 ஆம் நாளன்று, உரோமைபுரியில் உள்ள தனது நண்பர்களுக்கு எழுதிய மடலில், சவேரியார் தூத்துக்குடி முழுவதுமாக தனது இறைப்பணியை செயலாற்றிய பிறகே, மற்ற ஊர்களுக்கு சென்றதாக குறிப்பிடுகிறார்.

தூத்துக்குடிக்கு வடக்கே :- 1. வைப்பார், 2. சேத்துப்பார், 3. வேம்பார் ;

தூத்துக்குடிக்கும் மணப்பாட்டிற்கும் இடையே : 4. தூத்துக்குடி, 5. பழையகாயல், 6. புன்னைக்காயல், 7. தாழம்புளி, 8. வீரபாண்டியன்பட்டணம், 9. திருச்செந்தூர், 10. ஆலந்தலை, 11. மணப்பாடு ;

மற்றும் மணப்பாட்டிற்கு தெற்கே : 12. புதுக்கரை, 13. பெரியதாழை, 14. உவரி, 15. கூத்தன்குளி, 16. இடிந்தகரை, 17. பெருமணல், 18. குமரிமுட்டம், 19. கன்னியாகுமரி, 20. கோவளம், 21. ராஜாக்கள்மங்கலம், ஆகிய கிறிஸ்தவ ஊர்களில் பரவர்கள் வாழ்ந்து வந்தனர்.

புனித சவேரியார் தூத்துக்குடியில் பணியாற்றியபோது, அவர் பெரும்பாலும் புனித இராயப்பர் கோவிலிலேயே தங்கி திருப்பலி பூசை நிறைவேற்றி வந்தார். தூத்துக்குடி மக்களுக்கு புனித இராயப்பர் கோவில்தான் பல்லாண்டுகளாகப் பங்குக் கோவிலாகத் திகழ்ந்து வந்தது. 1574 ஆம் ஆண்டின் இயேசு சபை அறிக்கை, புனித



இராயப்பர் கோவிலை **'அகலமான பெரிய கோவில்'** என்று குறிப்பிடுகின்றது.

சவேரியார் முதன்முறையாக முத்துக் குளித்துறைக்கு வந்தபோது, தூத்துக்குடியின் புனித இராயப்பர் ஆலயம் மட்டுமே முத்துக் குளித்துறையில் இருந்தது. அக்காலத்தில் கிறிஸ்தவ ஊர்களில் கற்களாலான ஆலயங்கள் கட்டக் குறுநில மன்னர்கள் தடை விதித்திருந்தபடியால், ஊர்கள்தோறும் சவேரியார் குடிசைக் கோவில்களை அமைத்தார்.

சவேரியாரின் பயணங்களில் அவருடன் துணையாகச் சென்ற **பவுல் வாஸ்** (Paulo Vaz) 1545 ஆம் ஆண்டில் லிஸ்பன் நகரில் சமர்ப்பித்த அறிக்கையின்படி சவேரியார் கடலோரக் கிராமங்களில் ஏறக்குறைய 45 ஆலயங்கள் அமைத்துள்ளார், என தெரிய வருகின்றது.

1549 ஆம் ஆண்டில் இந்தியாவின் இயேசு சபை அதிபராக நியமிக்கப்பட்ட சவேரியார், முத்துக்குளித்துறையில் தனது வேத போதகப் பணிக்காக கோவாவிற்கும் கன்னியாகுமரிக்கும் இடைப்பட்ட 600 மைல் துயரத்தை 13 முறை கால்நடையாகவே கடந்துள்ளார்.

சீனா தேசத்தில் இறைப்பணியாற்ற விரும்பி அங்கு பயணப்பட்ட சவேரியார், சீனா தேசத்துக்குள் பிரவேசிக்க முடியாமல், அதன் அருகில் **சான்சியன்** (Sancian) தீவில், 1552 ஆம் ஆண்டு டிசம்பர் 2 ஆம் தேதி பின்னிரவில் பாக்கியமான மரணமடைந்தார்.

முத்துக்குளித்துறையின் கடலோர 30 ஊர்களில் கால்நடையாய் அலைந்து திரிந்து. திருமறையைப் போதித்து, சிற்றாலயங்கள் எழுப்பி, புதுமைகள் பல புரிந்து, தனது தளராத உழைப்பினால் ஒரு முழு இனத்தின் விசுவாச வரலாற்றிற்கு அடிக்கல் நாட்டிய **புனித சவேரியாரை** பரவ மக்கள் இன்றும் **'பெரிய தகப்பன்'** என்ற அன்பு பிணைப்புடன் நினைவு கூர்ந்து வருகிறார்கள்.

**தொடர்ந்து இயேசு சபையினர்**

போர்த்துக்கீசிய மன்னர் தனது ஞான அதிகாரப் பொறுப்பினை நன்கு உணர்ந்து, புனித சவேரியாருக்குப் பின் முத்துக் குளித்துறையில் இறைப்பணி ஆற்றிட இயேசு சபைக் குருக்களைத் தொடர்ந்து அனுப்பி வைத்தார்.

1545 ஆம் ஆண்டில் போர்த்துக்கல்லிலிருந்து வந்த 3 குருக்களில், **அந்தோணி கிரிமினாலி** (Antony Criminali) **ஜோம் பெயிரா** (Juan de Beira) ஆகிய இருவரும் 1545 ஆம் ஆண்டு மார்ச் மாதத்தில் முத்துக் குளித்துறைக்கு வந்தனர். புனித சவேரியார் தூர நாடுகளுக்கு மறைபணியாற்ற சென்றபோது, அந்தோணி கிரிமினாலி சுவாமிகள் முத்துக்குளித்துறையின் இயேசு சபை அதிபராக நியமனம் செய்யப்பட்டார்.

1549 ஆம் ஆண்டில் அந்தோணி கிரிமினாலி சுவாமிகள் வேதாளையில் வேதசாட்சியாக மரித்த பிறகு, முத்துக்குளித் துறையின் மூன்றாவது இயேசு சபை அதிபராக **என்றி என்றிக்கஸ்** (Henrique Henriques) அடிகளார் பொறுப்பேற்றார். சுவாமி என்றி என்றிக்கஸ், 1547 ஆம் ஆண்டு முதல் 1557 ஆம் ஆண்டு வரை, தூத்துக்குடி புனித இராயப்பர் ஆலயப் பங்குக் குருவாகப் பணியாற்றினார். 1552 ஆம் ஆண்டில் என்றி என்றிக்கஸ் அடிகளார் எடுத்த கணக்கெடுப்பின்படி, முத்துக்குளித்துறையின் கத்தோலிக்கர்கள் மொத்தம் 40,000 க்கு மேலாகும்.

1557 ஆம் ஆண்டு பிப்ரவரி 4 ஆம் நாளன்று **பாப்பரசர் 4ஆம் சின்னப்பர்** (Pope Paul IV, 1555-1559) **'ETSI SANCTA'** என்ற பத்திரத்தின் மூலம் கோவா மறை மாநிலத்தை **அதிமேற்றிராசன மாநிலமாக** உயர்த்தினார். அதே நாள் பாப்பரசரின் **'PRO-EXCELLENTI PRAEEMINENTIA'** என்ற பத்திரத்தின் மூலம், கொச்சி மறைமாநிலம் கோவா மறை மாநிலத்திலிருந்து பிரிக்கப்பட்டு, தனி மறைமாநிலமாக உயர்த்தப்பட்டது.

- (தொடரும்)



**தி. சொர்ணராஜன் விக்டோரியா**

**தூய பனிமய அன்னை திருத்தல பேராலய வரலாற்றுக் குறிப்புகள் : 13**



# பேராலய வரலாறு

சுருபங்களில் அணிவிக்கப்படும் பொன் ஆபரணங்களுக்கும் விலைமதிப்பற்ற பொருட்களுக்கும் பாதுகாப்பாக கோயில் வளாகத்தில் ஐந்து வீடுகளில் குடும்பங்கள் குடியமர்த்தப்பட்டிருந்தனர். அதை ஆதாரமாகக் காட்டி கோயில் வளாகம் பொது இடம் என எதிர்ப்பாளர்கள் வாதிட்டனர். கோயில் நிலம் டச்சுக்காரர் காலத்திலேயே அங்கீகரிக்கப்பட்டது என மேசைக்காரர் வாதிட்டனர். வழக்கு நடுவர் மன்றம் ஏறியது. அன்றைய திருநெல்வேலி கலெக்டர் Mac Gregor கள ஆய்வு நடத்தினார். அன்றைய மறைமாவட்டமும் நகரமன்றமும்கூட கோவா மிஷன் ஆலயத்துக்கு எதிராகவே வலிமையாகச் செயல்பட்டன.

எதிர்ப்பாளரின் பலத்தையும் யதார்த்த நிலையையும் எடை போட்ட கலெக்டர் இருவருக்கும் பொதுவான தீர்ப்பு எனக் கருதி, “நிலம் அரசுக்கு சொந்தம். ஆனால் முழுக்க முழுக்க கோயில் பயன்பாட்டுக்கே உரியது” என எழுதி வைத்ததாகக் கூறுவர். “யூதர்கள் இயேசுவை சிலுவையில் அறைந்தார்கள். இவர்களோ ஒருவரை ஒருவர் சிலுவையில் அறைந்து கொண்டார்கள்” என்று ஒரு முதிய சிவபக்தர் சொன்னதாகச் சொல்வார்கள்.

### ஐதீகமும் வரலாறும்

பொதுவாக சமயம் சார்ந்த நிகழ்வுகள் பற்றிய செவி வழிச் செய்திகள் தலைமுறை தலைமுறையாக பக்தர்கள் மத்தியில் பரவும் போது காலப் போக்கில் கற்பனை முலாம் பூசப் பட்ட கதைகளாக மாறிவிடுவது இயல்பு. நிகழ்வுகளின் சமகால வரலாற்றுப் பதிவுகள் தான் தெளிவுபடுத்தக் கூடும். தூய பனிமய அன்னையின் அழகிய திருச்சுருபம் எங்கிருந்து எப்போது எவ்வாறு தூத்துக்குடிக்கு வந்து சேர்ந்தது என்பதைப் பற்றி பக்திப் பாரம்பரியக் கதைகள் பல உண்டு. அவற்றில் பரவலாகப் பேசப்படுவது :

தூய பிரான்சிஸ் சவேரியார் திருமறை பரப்புதலுக்காக கீழ்த்திசை நாடுகளுக்குப் பயணித்தபோது வழியில் பிலிப்பைன்ஸ் தீவிலிருக்கும் மணிலா பட்டணத்துக்குச் சென்றதாகவும், அங்கு அப்போது அகுஸ்தீனியன் கன்னியர் மடம் ஒன்று இருந்ததாம். அக்கன்னியர் மடத்துக்குச் சென்ற புனிதர் அங்கிருந்த அன்னையின் அழகிய திருச்சுருபத்தைக் கண்டு அம்மடத்துத் தலைவியிடம் அதை புதிதாக திருமறை தழுவிய முத்துக்குளித்துறை பரவருக்காக தூத்துக்குடிக்கு அனுப்ப இயலுமா என்று கேட்டாராம். காரணம், பரவர் கத்தோலிக்கராகு முன் மதுரை மீனாட்சி, கன்னியாகுமரி பகவதி ஆகிய பெண் தெய்வங்களை வழிபட்டு வந்தவர்களுக்கு, மரியன்னை பக்தியைப் புகுத்தினால் கிறித்தவத்தில் அசைக்க முடியாத பக்தர்களாக வேரூன்றி விடுவார்கள் எனக் கருதினாராம். அக்கன்னியர்கள் அவர் வேண்டுகோளை ஏற்க மறுத்தனராம்.

ஓரிரு ஆண்டுகட்கு பின் புனிதரின் இறப்பு பற்றியும் அவர் செய்த அற்புதங்கள் பற்றியும் கேள்விப்பட்ட கன்னியர் சாந்தா எலேனா என்ற கப்பலில் அன்னையின் சுருபத்தை அனுப்பி வைத்தனராம். கி.பி. 1555ஆம் ஆண்டு சூன் மாதம் ஒன்பதாம் நாள் சாந்தா



**எலேனா கப்பல் தூத்துக்குடி வந்ததாகவும்,** அப்போது முத்துக்குளித்துறை பரவர் குலத் தலைவன் சிஞ்ஞோர் சிஞ்ஞோர் தொன் மிக்கேல் ஜெவோம் தெக்குருஸ் தன்பரிவாரங்களோடும், கோவா முதன்மை குரு மிக்கேல் வாஸ் ஆகியோரும் பக்திப் பரவசத்தோடு அன்னையின் திருச்சுருபத்தைப் பெற்று பேதுரு ஆலயத்தில் வைத்தனராம்.

மேற்கண்ட செவிவழிச் செய்தியில் சில வரலாற்று முரண்பாடுகளைக் காண்கின்றோம்.

1. மணிலா நகர் **கி.பி.1571ஆம் ஆண்டு**தான் அமைக்கப்பட்டது. எனவே அங்கு சவேரியார் சென்றிருக்க வாய்ப்பில்லை. அங்கு ஒரு கன்னியர் மடமும் இருந்திருக்க வாய்ப்பில்லை. மேலும் திருத்தந்தை ஆறாம் அலக்சாண்டர் முன் மொழிதலில் போர்த்துக்கல்லுக்கும் ஸ்பெயினுக்கும் இடையில் 1494ஆம் ஆண்டு ஏற்பட்ட உடன்படிக்கைப்படி (Treaty of Tordesilas 1494 at the initiative of Pope Alexander VI) புதிய நாடுகளைக் கண்டுபிடித்து லவங்கம் பொருள் வணிகம் தேட ஸ்பெயின் மாலுமிகளும் கப்பல்களும் பூமியின் நெடுங்கோடு 46º37'க்கு கிழக்கில் போகக்கூடாது, மேற்கு நோக்கித்தான் போக வேண்டும், அந்நேர் கோட்டுக்கு கிழக்கே போர்த்துக்கல் கடலோடிகளுக்கு ஒதுக்கப்பட்டது. எனவே ஸ்பெயின் நாட்டு அரசர் சார்லஸ் (King Charles of Spain) காலத்தில் D'Aranda வாங்கிய ஐந்து கப்பல்களின் தலைவனாக மெகல்லான் (Ferdinand Magellan) கி.பி. 1519ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் 20ஆம் தேதி Seville துறைமுகத்திலிருந்து புறப்பட்டவன் அட்லான்டிக் பெருங்கடலைத் தாண்டி தென்அமெரிக்க கரையை ஒட்டி ஓடி அதன் முனையைக் கடந்து கீழ்த்திசையில் மூன்று தீவுகளைக் கண்டறிந்தது 1521ஆம் ஆண்டு மார்ச் 7ஆம் நாள் ஏறத்தாழ ஒன்றரை ஆண்டுகள் கழித்து அத்தீவுகளுக்கு Santa Lazarus என்று பெயர் சூட்டியவன், அவன் மாலுமிகளோடு கரையிறங்கியபோது, அத்தீவின் ஆதிவாசிகளுக்கும் அவர்களுக்கும் ஏற்பட்ட மோதலில் ஆதிவாசிகள் எய்த விஷ அம்பு தைத்து மெகல்லான் இறந்தார் என்பது வரலாறு. அவன் இறந்தநாள் 1521ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 27ம் தேதி. அவன் உடலைக்கூட மீட்க முடியாமல் அவனுடைய மாலுமிகள் 1521ஆம் ஆண்டு மே திங்கள் ஒன்றாம் தேதி அங்கிருந்து புறப்பட்டு ஸ்பெயின் நாட்டிற்கு திரும்பப்போய் சேர்ந்தது. 1522ஆம் ஆண்டு செப்டம்பர் எட்டாம் தேதி அதாவது போவதற்கு ஒன்றரை வருடம் திரும்பி வருவதற்கு ஒன்றரை வருடம், ஆக மூன்று வருடம். என்று மெகலான் பெயர் சூட்டிய அந்த மூன்று தீவுகளும்தான் கப்பலின் அரசர் பிலிப்பு காலத்தில் பிலிப்பைன்ஸ் தீவுகள் என்று அழைக்கப்பட்டன. அப்படி ஒரு ஆபத்தான நீண்ட கடல் பயணத்தை கன்னியர்கள் மேற்கொண்டிருப்பார்களா?

*- தொடரும்*



**செல்வராஜ் மிராந்தா**

# ‘பனிமயம்’ – மீள் பார்வை 19

## 2003

ஆண்டவரை நோக்கி நாம் பலவிதமான செபங்கள் சொல்கிறோம். எதற்காக? திருமணம் நடைபெற வேண்டும், குழந்தை வேண்டும், செல்வம் வேண்டும், தேர்வில் வெற்றி பெற வேண்டும், வேலை வேண்டும், உடல் நலம் பெற வேண்டும்..... இப்படி நம் தேவைகளை இறைவனிடம் இறைஞ்சுகிறோம். தினமும் பலமுறை விதவிதமான செபங்களைச் சொல்லி வருகிறோம்.

இறைமகன் இயேசு, “கேளுங்கள் கொடுக்கப்படும்” என்றார். கேட்டதைக் கொடுப்பார். ஆனால், நம் இதயங்கள் சுத்தமாக இருக்க வேண்டும். உள்ளம் தூய்மையாக இருக்க வேண்டும். விண்ணையும் மண்ணையும் படைத்த கடவுள் சொன்னபடி நாம் வாழ்கிறோமா? – **தா. தாமஸ் வாஸ்.**

★ கடலூர் மாவட்டம், உளுந்தூர்ப் பேட்டையிலிருந்து, சுமார் 12 கி.மீ. தொலைவில் அமைந்துள்ள அழகிய குக்கிராமம்தான் ஆரியனூர் என்னும் கோணான்குப்பம். 17-ஆம் நூற்றாண்டு தொடக்கத்தில், **வீரமாமுனிவர்** இங்குதான் தங்கி, ‘தேம்பாவணி’யை இயற்றினார். காவியம் படைத்த இவ்வூரில்தான், புதுமைகள் பல புரியும் **பெரிய நாயகி அன்னை**க்குத் திருத்தலம் அமைக்கப்பட்டுள்ளது.

குழந்தைப் பாக்கியம் இல்லாதவர்க்கு, குழந்தைப் பேற்றை, இறைவனிடமிருந்து பெற்றுத் தரும் அன்னையாகத் திகழ்கிறார்கள். அதனால்தான், **‘மகட்கொடு மாதா’** என்றும் செல்லமாக அழைக்கப்படுகிறார்கள். – கீழவைப்பாறு, **மி. அந்தோணி துசியன்.**

★ **மரியாவும் மனித நேயமும்** – “மனிதனுக்கும் மாட்டுக்கும் இடையே உள்ள வேறுபாடு என்ன?” – என்று சிறுவர்களை நான் கேட்டதற்கு ஒருவன், “மனிதன் சோறு சாப்பிடுகிறான்; மாடு புல் தின்கிறது” – என்றான்.

இதே கேள்வியைக் கிரேக்க நாட்டுத் தத்துவ மேதை சாக்ரட்டீசிடம் கேட்டதற்கு அவர், “ஒரு மாடு, மற்றொரு மாட்டைப் பற்றி அக்கறை கொள்ளாது. மாறாக, ஒரு மனிதன் மற்ற மனிதனைப் பற்றி அக்கறை கொள்வான். அடுத்தவரைப் பற்றி அக்கறை கொள்ளாதவன், நன்றாகத் தின்று கொழுத்த பன்றி” என்றார்.

பிறருடைய துன்பத்தைத் தன்னுடைய துன்பமாகக் கருதாவிட்டால், அறிவினால் என்ன பயன் என்று கேட்கிறார் **வள்ளுவர்** (குறள் – 315).

அன்னை மரியாவிடம் மனித நேயம் நிறைந்து வழிந்தது. மரியா, அருளின் முழுமை மட்டுமல்ல, அன்பின் நிறைகுடமும் ஆவார். மரியாவின் மனிதநேயத்தைப் பின்பற்றி நாமும் மனிதராகுவோமா? எல்லார்க்கும் எல்லாம் ஆவோமா? – **அருட்திரு. Y. இருதயராஜ்** – தாய்க்குத் தாலாட்டு.

★ வீரமாமுனிவருக்கு முன்பாக, மெய் எழுத்துகளுக்கு மேல் வைக்கப்படும் புள்ளிகள் இடப்படுவது கிடையாது. ‘ர’ என்பதற்கு, கீழேயுள்ள கால் கொடுக்கப் படுவதில்லை. ‘ே’ என்ற கொம்பு இல்லை. எல்லாவற்றிற்கும் ‘ெ’ என்பதே பயன்படுத்தப் பட்டது.

ஆனால், வீரமாமுனிவர், தமிழ் எழுத்துகளைச் சீர்திருத்தி, எளிதாக அடையாளம் கண்டுகொள்ள, மெய்யெழுத்துகள் மேல், புள்ளிகளும், ‘ர’விற்குரிய காலும், இரட்டைக் கொம்பையும்(ே) அறிமுகம் செய்தார். – **அருள்திரு. ச.இ. அருள்சாமி.**

★ **மருத்துவக் குறிப்புகள்**

– சிறுநீரக நோயாளிகள் இளநீர் அருந்தக்கூடாது.

– சிகரெட், சுருட்டு, பீடி புகைப் பிடிப்பவர்களுக்கு, நுரையீரல் புற்று நிச்சயம் வந்துவிடும். ஆண்மை இழப்புக் குறைபாடும் ஏற்படும்.

– 'ஷாம்பு'வின் உற்பத்தியில் ஈஸ்ட்ரோஜன், ஹார்மோன் அநேகமாகச் சேர்ப்பதால், பெண்களின் மலட்டுத் தன்மைக்குக் காரணமாகிவிடுகிறது.

– ஆண்களின் விந்தணுக்களை (SPERM) ஷாம்பு சாகடிக்கிறது.

– சிறுமிகளுக்கு தொடர்ந்து 'ஷாம்பு' பயன் படுத்தினால், மிகக் குறைந்த வயதிலேயே வயதுக்கு வந்துவிடுவார்கள்.

– அடிக்கடி பிராய்லர் சிக்கன் உண்பதாலும், இளம் வயதிலேயே பெண் சிறுமி பருவமடை கிறாள்!



★ தூத்துக்குடி மறை மாவட்ட **ஆயர் மேதகு பீற்றர் பர்னாண்டோ,** மதுரை மறைமாநிலப் பேராயராக உயர்த்தப்பட்டிருக்கிறார்கள். வாழ்த்தி வணங்குகிறோம். – பொறுப்பாசிரியர்.

★ இன்றையச் சூழ்நிலையில், தன்னலமற்ற தியாக உள்ளம் கொண்டவர்களைக் காண்பதே அரிது. தான் வாழ வேண்டும்; தனக்காகவே எல்லாரும் வாழ வேண்டும் என்று ஆசித்து, அதற்காகவே அனைத்தையும் செய்யும் மாந்தர் கூட்டம் பெருகிக் கொண்டே போகிறது. சுயநலம் தலைவிரித்தாடும் காலம் இது. இப்படிப்பட்ட நிலையில், தன்னையே தியாகம் செய்து, தன் வசதிகளையும் விருப்பத்தையும் துறந்து, மனுக்குலம் உய்ய வேண்டும் என்பதற்காகத் தம் திருமகனையே உலகிற்கு அளித்த அன்னையாம் மரியாள், தியாகத் தாயாக உயர்ந்து நிற்கிறாள். எத்தகைய முயற்சிகளை அன்னை மரியாள் செய்திருப்பார் என்று ஆராய்ந்து பார்ப்பது நலமாயிருக்கும். – **அருட்திரு. J. இரத்தினராஜ்,** பங்குத்தந்தை.

★ **'இயேசுவின் நேரம்'** – என்பது, அவர் தமது சிலுவைச் சாவு வழியாக உயிர்ப்பின் மகிமையை அடைய வேண்டிய நேரம். ....துன்பம் எங்கு, எப்பொழுது, எந்த வடிவத்தில் வந்தாலும், சிலுவை அடியில் நெஞ்சுறுதியுடன் நின்ற நம் அன்னை மரியாவைப் பின்பற்றி, அதை இன்முகத்துடன் ஏற்று, மீட்பின் கருவியாக மாற்றுவோம். – **அருட்திரு. Y. இருதயராஜ்**



**கலாபன் வாஸ்**

94863 90793

## பிறந்தநாள் வாழ்த்துகள்!

பனிமயம் இதழின் பொறுப்பாசிரிய ராகவும், ஆசிரியர் குழுவின் உறுப்பின ராகவும் கடந்த 22 ஆண்டுகள் பங்களிப்பு செய்த

**திருமிகு.**

**கலாபன் வாஸ்**

**01.04.2021**

அன்று **91 வயது**



நிறைவு செய்கிறார்கள். பொது நிலையினர் உருவாக்கம், திருமணப் பயிற்சி, பங்கு மேய்ப்புப் பணிப் பயிற்சியாளர், கத்தோலிக்க இதழ்களின் எழுத்தாளர், பயிற்சியாளர் எனத் தூத்துக்குடி மறைமாவட்டத்துக்குப் பல வகைகளில் சேவை செய்துவருகிற அன்னாரைப் பனிமயம் இதழ் மனமார வாழ்த்திப் பாராட்டுகிறது. உடல் வலிமை, மன மகிழ்வோடு வாழ்ந்து நூறாண்டு காண இறைவனை இறைஞ்சுகிறது.

மரியன்னையின் மேன்மைகள் : 14

# அன்னையின் ஏழு துயரங்கள்!



அன்னை மரியா தம் வாழ்வில் சந்தித்த எண்ணிலடங்காத் துயரங்களில் ஏழு துயரங்களைத் தேர்ந்தெடுத்து "மரியன்னையின் ஏழு வியாகுலங்கள்" என்று அழைக்கிறது திருஅவையின் மரபு.

**1. ஆசிக்குப் பதிலாகத் துயரச் சொல்லாய் மாறிய சிமியோனின் இறைவாக்கு :** இயேசு பிறந்த நாற்பதாம் நாள் தூய்மைச் சடங்குகளுக்காக எருசலேம் கோவிலுக்குச் சென்றபோது, அங்கே இறைவாக்கினர் சிமியோனைச் சந்திக்கிறார்கள். "சிமியோன் அவர்களுக்கு ஆசி கூறி, அதன் தாயாகிய மரியாவை நோக்கி, 'இதோ, இக்குழந்தை இஸ்ரயேல் மக்களுள் பலரின் வீழ்ச்சிக்கும் எழுச்சிக்கும் காரணமாக இருக்கும்; எதிர்க்கப்படும் அடையாளமாகவும் இருக்கும். இவ்வாறு பலருடைய மறைவான எண்ணங்கள் வெளிப்படும். உமது உள்ளத்தையும் ஒரு வாள் ஊடுருவிப் பாயும்' (லூக் 2: 34-35) என்றார்."

தன் குழந்தை எதிர்க்கப்படும் அடையாளமாக இருக்கும் என்பதைக் கேட்கும் எந்தத் தாயின் மனம்தான் துயரம் அடையாதிருக்கும்? அன்றே அவரது உள்ளத்தைத் துயரத்தின் வாள் ஊடுருவி விட்டது. அவரது வாழ்நாள் முழுவதும் அந்தத் துயரம் நீடித்தது. இயேசுவின் பணி வாழ்வு முழுவதும் இயேசு பரிசேயர்கள், சதுசேயர்கள், மறைநூல் அறிஞர்கள் மற்றும் குருக்களின் கூட்டத்தால் எதிர்க்கப்பட்டுக் கொண்டேயிருந்தார். ஒவ்வொரு முறையும் இந்த எதிர்ப்பு பற்றிக் கேள்விப்பட்ட போதெல்லாம் நிச்சயம் அன்னை மரியாவின் உள்ளம் துயரத்தில் ஆழ்ந்திருக்கும். இருப்பினும், அவரது ஆழ்ந்த இறை நம்பிக்கை, அந்த நம்பிக்கை தந்த துணிவு, தூய ஆவியார் தந்த ஆற்றல் இவற்றின் துணையுடன் அந்தத் துயரத்தை மேற்கொண்டார் அன்னை மரியா.

இன்றும் குழந்தைகள் பிறந்த சில நாள்களிலேயே, அல்லது மாதங்களிலேயே இனி இந்தக் குழந்தை பேசாது, பார்க்காது, அல்லது நடக்காது என்று மருத்துவர்களால் சொல்லப்படும் தாய்மார்களின் உள்ளத்தில் எத்தகைய வாள் ஊடுருவிப் பாயும் என்பதை நாம் முற்றிலும் உணர முடியாது. அந்தத் துன்பத்தை அனுபவித்துப் பார்க்கிறவர்களுக்குத்தான் அந்த வலி தெரியும். இப்படிப்பட்ட தாய்மார்களுக்கு ஆறுதல் தருபவராக, ஆற்றல் தருபவராக விளங்குகிறார் நம் மரியன்னை. அவரது துணையோடு இந்தத் தாய்மார்கள் தங்கள் குழந்தைகளை ஏற்றுக்கொண்டு, தங்கள் வாழ்க்கைப் பயணத்தைத் தொடர்வார்களாக.

**2. எகிப்துக்கு ஓடிப் போகும் அகதி அனுபவம்.** அன்னை மரியாவின் இரண்டாவது துயரம் அவரது எகிப்து நாட்டுப் பயணம். "ஆண்டவருடைய தூதர் யோசேப்புக்குக் கனவில் தோன்றி, நீர் எழுந்து குழந்தையையும் அதன் தாயையும் கூட்டிக் கொண்டு எகிப்துக்குத் தப்பி ஓடிச் செல்லும். நான் உமக்குச் சொல்லும்வரை அங்கேயே இரும். ஏனெனில், குழந்தையை ஏரோது கொல்வதற்காகத் தேடப்போகிறான் என்றார்" (மத் 2: 13). குழந்தையைத் தூக்கிக் கொண்டு எகிப்து நாட்டுக்கு ஓடிப்போகும் பயணமும், அந்த நாட்டிலே ஓர் அகதியாக, ஏதிலியாக



வாழ்ந்ததும் அவரது வாழ்வின் இரண்டாவது துயரம்.

அங்கே பாதுகாப்பின்மை, பதட்டம், சொந்த வீடு இன்றி பிறரைச் சார்ந்தே வாழும் நிலை போன்ற வாழ்வியல் சிக்கல்களைச் சந்தித்தார் அன்னை மரியா. இருப்பினும், மனம் சோர்ந்துவிடவில்லை. தம்மை அழைத்த, அருள்பொழிந்த ஆண்டவர் இறுதிவரை வழிநடத்துவார் என்னும் நம்பிக்கையில் அவர் எகிப்தில் வாழ்ந்தார். அவரது நம்பிக்கையின்படியே சில ஆண்டுகளுக்குப் பின் தமது சொந்த ஊரான நாசரேத்துக்குத் திரும்பி வந்தார்.

இன்றும் சொந்த நாட்டைவிட்டு, ஊரைவிட்டு அகதியாக வாழ்கிற பெண்கள், சொந்த வீடினின்றிப் பிறரைச் சார்ந்தே வாழ்கிற மனிதர்கள் இருக்கத்தான் செய்கிறார்கள். அவர்கள் அனைவருக்கும் மரியன்னைதான் அடைக்கலமாக, ஆறுதலாக இருக்கிறார். அந்தத் தாயின் கைகளைப் பற்றிக்கொண்டவர்கள் ஒருநாள் நிச்சயம் கரை சேர்வார்கள்.

**3. இயேசு காணாமல் போனதால் அடைந்த துயரம்.** மரியாவின் வாழ்வில் நிகழ்ந்த மூன்றாவது துயரம் பன்னிரண்டு வயது நிரம்பிய மகனை எருசலேம் திருவிழாவின்போது காணாமல் தவித்தது (லூக் 2: 43-45).

இன்று நம் நாட்டில் காணாமல் போகும் குழந்தைகளின் எண்ணிக்கை மிகவும் அதிகம். பிச்சை எடுப்பதற்காகவும், பாலியல் தொழிலில் ஈடுபடுத்துவதற்காகவும், பிறருக்கு விற்பனை செய்வதற்காகவும் குழந்தைகள் கடத்தப் படுவது தொடர்கதையாகி விட்டது. காணாமல் போன குழந்தைகள் சில நேரம் கிடைத்து விடுகிறார்கள். சில வேளைகளில் திரும்பக் கிடைப்பதேயில்லை. இத்தகைய தாய்மார்களின் உள்ளம் எவ்வளவு துயரம் அடையும்! அவர்களுக்கெல்லாம் அன்னை மரியா ஆறுதல் தந்து, தேற்றியருள்வார்.

**4. இயேசுவின் சாவையொட்டிய நான்கு துயரங்கள்:** கல்வாரிப் பாதையில் இயேசுவைச் சந்தித்தல், இயேசு சிலுவையில் அறையப்படுதல். இயேசுவின் பணிவாழ்வின் நிறைவாக அவரது பாடுகள் அமைகின்றன. அந்நேரத்தில் அன்னை மரியா அவரோடு இருக்கின்றார். சிலுவைப் பாதையில் அவரைச் சந்தித்து, அவரைத் தேற்றுகிறார்.

“சிலுவை அருகில் இயேசுவின் தாயும், தாயின் சகோதரியும் குளோப்பாவின் மனைவியுமான மரியாவும், மகதலா மரியாவும் நின்று கொண்டிருந்தனர்” (யோவா 19: 25) என்று பதிவு செய்துள்ளார் யோவான். இக்காட்சியைப் பற்றி எழுதும் புனித அம்புரோஸ், “சிலுவையடியில் மரியா நின்று கொண்டிருந்தார் என்றுதான் நாம் வாசிக்கிறோம், அழுதுகொண்டிருந்தார் என்றல்ல” என்கிறார். தமது கையறு நிலையை எண்ணி அழுது புலம்பாமல், தமது மகனின் வீர இறப்பை எண்ணி, தந்தையாம் இறைவனுக்குத் தம் மகனையே ஒப்புக் கொடுத்தார். இந்த மாபெரும் அன்பை நாம் உணரவேண்டும் என்கிறார் புனித அம்புரோஸ்.

இயேசுவின் உடல் சிலுவையிலிருந்து இறக்கப்பட்டு, தாயின் மடியில் கிடத்தப்பட்ட போதும், அவரது உடலை அடக்கம் செய்தபோதும் அன்னை மரியா அடைந்த துயரம் அளவிடற்கரியது. “உமது சொற்படியே எனக்கு நிகழட்டும்” என்று முதலில் கொடுத்த அந்த அர்ப்பணத்தை இறுதி வரையில் வாழ்ந்தார் அன்னை மரியா. இயேசுவின் இறப்பையும், அடக்கத்தையும் தியானித்த புனித பெர்னார்ட், “அன்பின் மிகுதியால் இயேசு உடலில் இறந்தார். அன்பின் மிகுதியால் அன்னை மரியா தன் உள்ளத்தில் இறந்தார்” என்கிறார். ஆம், இயேசுவின் இறப்போடு தம் உள்ளத்தில் ஒன்றி, மீட்பின் பணியில் மரியாவும் பங்குகொண்டார்.

இயேசுவைப் போலவே, மரியாவும் “துன்பங்கள் வழியே கீழ்ப்படிதலைக் கற்றுக்கொண்டார்” (எபி 5:8). நாமும் நமது துன்பங்கள் வழியே இறைத் திருவுளத்திற்குப் பணிந்து நடக்கும் அருளை அந்தத் தாய் பெற்றுத் தருவாராக!

**அருள் மரி வேந்தன்**

# அழகின் முழுமையே தாயே



அன்னை மரியா அழகின் முழுமையாய் முழுநிலவாய் காட்சியளிக்கின்றார். அவள் அழகு வெளிப்புறத்தோற்றத்தால் மட்டும் அமைவதில்லை. "அகத்தின் அழகு முகத்தில் தெரியும்" என்ற பழமொழியின் அடிப்படையில் அன்னையின் அகத்தின் அழகும் பொலிவும் முகத்தில் மலர்ந்து அவள் காட்சியளிக்கின்றார்.

பாலும் தெளித்தேனும் அருந்தி வந்த அழகல்ல. இது உள்ளத்தின் தூய்மையும் வாழ்வின் நேர்மையும் அன்னையின் முகத்தை பொலிவாக்கி அழகாக்கியுள்ளது. ஆம் அன்பார்ந்தவர்களே! அன்னையின் அழகுக்கு காரணமான அவளின் குணங்கள் மூன்றினைப் பற்றி இன்று சிந்திப்போம்.

**1. பிறருக்காக தன்னை அர்ப்பணித்த அன்னையின் குணம்**

யோவான் 2:3ஆம் இறைவார்த்தை பின்வருமாறு கூறுகிறது, "திருமணவிழாவில் திராட்சை இரசம் தீர்ந்துவிட்டது என்றார்" திருமண வீட்டார் அன்னையிடம் இந்த தேவையை முன்வைத்ததாக தெரியவில்லை. ஆனால், தாயே இத்தேவையை அறிந்து தகுந்த நேரத்தில் உதவி செய்ய வருகின்றார்.

"காலத்தில் செய்த நன்றி சிறிதெனினும், ஞாலத்தால் மாணப் பெரிது" என்றுரைத்த வள்ளுவனின் வாக்கிற்கிணங்க அன்னையின் தகுந்த நேரத்தில் அமைந்த இவ்வுதவி அக்குடும்பத்திற்கு பெரிதும் துணையாகவும் ஆறுதலாகவும் அமைந்திருக்கும். ஏனெனில் திருமண விருந்தில் திராட்சை ரச குறைபாடு என்பது அவமானத்தையும் ஏற்படுத்தும் செயலாக அமைந்திருந்தது என்பது தான் உண்மை.

மேலும் தன் உறவினரான எலிசபெத் கருவுற்றிருக்கிறார் என்பதை அறிந்து தேடிச்சென்று உதவிய அன்னையின் பண்பு

அவர் எந்த அளவுக்கு பிறரின் தேவைகளை உணர்ந்து செயல்பட்டாள் என்பதை விளக்குகின்றது.

இதை லூக்கா 1:39-40 பின்வருமாறு கூறுகின்றார். அதன்பின் மரியா புறப்பட்டு யூதேயா மலை நாட்டிலுள்ள ஓர் ஊருக்கு விரைந்து சென்றார். அவர் செக்கரியாவின் வீட்டை அடைந்து எலிசபெத்தை வாழ்த்தினார் என்று. தான் இறைவனின் தாய், எலிசபெத்தே அவரின் முன்னோடியான யோவானின் தாய் தானே என நினைத்து பெருமையில் மூழ்கிவிடவில்லை அன்னை.

"இறைப்பற்றுள்ளோருக்கு நன்மைசெய்: உனக்கு கைம்மாறு கிடைக்கும். அவர்களால் இயலாவிடினும் உன்னத இறைவன் கைம்மாறு செய்வார்" என்று சீராக் 12:2 கூறுவது போல், இறைப்பற்றில் விளங்கிய எலிசபெத் என்னும் தன் உறவினருக்கு கைம்மாறு கருதாத உதவி நல்கி மகிழ்கின்றார் அன்னை.

**2. அன்னையின் அமைதி**

சீராக் 26:16 இவ்வாறு கூறுகிறது "ஒழுங்கமைதி உடைய இல்லத்தில் விளங்கும் நல்ல மனைவியின் அழகு ஆண்டவர் உறையும் உயர்வானில் எழும் கதிரவனைப் போன்றது" என்று. ஆக, அன்னையின் வாழ்வின் முக்கியமான மிகவும் துன்பகரமான வேளையில் அனுபவித்த அன்னையின் அமைதி, அவளை அழகில் எழிலூட்டுகின்றது என்பது மறுக்கமுடியா உண்மை.

"உமது உள்ளத்தை ஓர் வாள் ஊடுருவும்" "உன் மகன் எதிர்க்கப்படும் அடையாளமாய் இருப்பான்" என சிமியோன் கூறிய வேளையிலும், தன்னை மறைவாய் யோசேப்பு விலக்கிட துணிந்த நேரத்திலும், ஒரே மகனை பேய்பிடித்தவன், பைத்தியக்காரன் என ஊர்தூற்றியபோதும், நன்மை மட்டுமே செய்ய தெரிந்த தன் மகனை சிலுவை மரத்தில் தொங்க கண்ட பொழுதும் நிலைகுலைந்து ஊர்தூற்றியவள் அல்ல நம் அன்னை. இது என்விதி என்று தன் இயலாமையில் நிறைவேற தான் படும் இடர்களை தாண்டிச்செல்ல வேண்டும் என்ற துணிவில் பிறந்த அமைதி, தன் சார்பாக துணைநிற்க "எல்லாம் என்னால் முடியும்" என்ற இறைவன் உண்டு என்ற நம்பிக்கையில் பிறந்த அமைதி. இந்த அமைதி அவளின் அழகிற்கு மெருகூட்டிச் சென்றது என்பது மறுக்க முடியாதது.

**3. எடுத்த செயல்பாட்டில் அன்னை கொண்டிருந்த உறுதிப்பாடு**

இதைத்தான் சீராக் 26:18 பின்வருமாறு கூறுகிறது, "உறுதியான அடிகளின்மேல் நிற்கும் பெண் தூண்களைப் போன்றவை" என்று "ஆம்" என்று வானதூதருக்குச் சொன்ன வார்த்தையில் எழுந்த உறுதிப்பாட்டில் சற்றும் பிறழாது சென்ற அன்னை அழகாகிறாள். இது எளிமையான பாதையல்ல, கரடுமுரடானது, தன் அன்பு மகனைக்கூட இழக்குமளவிற்கு கடுமையானது இருப்பினும் உறுதிப்பாட்டில் நிலைத்து நிற்கின்றாள் நம் அன்னை.

ஆக, நமக்கு அவள் தரும் அழைப்பு இதுதான், "உலகம் தரும் அழகு மாயை" என்பது பொய்யானது அழகுப் பொருள்களாலும் வெள்ளை நிறத்தாலும், மெலிந்த உடலாலும் அமைவதல்ல அழகு. நற்குணங்களாலும், நேரிய சிந்தனையாலும், பிறரின் மேல் கொண்டுள்ள அன்பாலும், எடுத்த நிலைப்பாட்டில் கொண்டுள்ள உறுதிப்பாட்டாலும் அமைந்ததே உண்மையான அழகு. இந்த அழகிற்காக உழைப்போம். அழகினை சொந்தமாக்கி கொள்வோம்.



**ஸ்டார்லின் ச.ல.**

# புனித ஐரனேயஸ்

## அன்னை மரியா ஒரு புதிய ஏவாள்!



முதல் மரியன்னைப் புனிதர் என்ற பட்டத்திற்குப் பொருத்தமானவர் நற்செய்தியாளர் புனித யோவான்தான். காரணம், இவர்தான் சிலுவையில் தொங்கிய இயேசுவிடமிருந்து "இவரே உம் தாய்" என்று அன்னை மரியாவைத் தாயாகப் பெற்றுக் கொண்டவர். "அந்நேரமுதல் அச்சீடர் அவரைத் தம் வீட்டில் ஏற்று ஆதரவு அளித்து வந்தார்" (யோவா 19: 27) என்பது என்னே ஓர் அருமையான வாக்கியம். அன்னை மரியாவைத் தம் வீட்டில் ஏற்று, போற்றிப் பெருமைப்படுத்தும் பேறு கிடைக்கப் பெற்றவர் புனித யோவான்.

இருப்பினும், இத்தொடரின் முதல் நாயகனாக இரண்டாம் நூற்றாண்டைச் சேர்ந்த லயன்ஸ் நகரத்துப் புனித ஐரனேயஸ் (St. Irenaeus of Lyons) வருகை தருகின்றார். இவர்தான் மரியன்னை பற்றிய போதனைகளை முதன் முதலில் திருச்சபைக்கு வழங்கியவர். இவர் (தற்போது பிரான்ஸ் நாட்டில் இருக்கும்) லயன்ஸ் நகர ஆயர். திருச்சபையின் வரலாற்றில் "திருச்சபைத் தந்தை" மற்றும் "மறைப்போதகர்" (Church Father and apologist) என்னும் பெயர்களால் சிறப்பிக்கப்படுபவர். தொடக்க கால இறையியலாளர்களுள் ஒருவர்.

முதல் மரியன்னைப் புனிதர் என்னும் பெயருக்குப் பொருத்தமானவர்தான் புனித ஐரனேயஸ். அன்னை மரியாவைத் தம் வீட்டில் ஏற்றுக்கொண்ட புனித யோவனின் சீடர்களுள் ஒருவர் ஸ்மிர்னாவின் ஆயரான புனித போலிகார்ப் (St. Polycarp). தமது இள வயதிலேயே புனித போலிகார்ப்பின் போதனைகளால் ஈர்க்கப்பட்டு, அவரது சீடரானவர் ஐரனேயஸ். யோவானிடமிருந்து போலிகார்ப் பெற்றுக்கொண்ட இயேசு மற்றும் அன்னை மரியா பற்றிய செய்திகளை அவரது வாய்மொழியாலே பலமுறை கேட்டவர். எனவே, இயேசுவைப் பற்றியும், அன்னை மரியாவைப் பற்றியும் பேசவும், எழுதவும் பொருத்தமானவர்தான் ஆயர் ஐரனேயஸ்.

அன்னை மரியாவின் சிறப்புப் பெயர்களுள் ஒன்று அவர் "புதிய ஏவாள்" என்பதை நாம் அறிவோம். ஆனால், இந்தப் பெயரை இரண்டாம் நூற்றாண்டைச் சேர்ந்த புனித ஐரனேயஸ்தான் வழங்கினார் என்பது நாம் அறியாத தகவல்.

அக்காலத்தில் நிலவிய ஞானஒளிக் கொள்கையை (Gnosticism) எதிர்த்து வலிமையாக எழுதினார் ஐரனேயஸ். அவருடைய பல எழுத்துகளிலும் இன்று நம்மிடையெ இருப்பது அவர் இலத்தீன்

மொழியில் எழுதிய “தப்பறைகளுக்கு எதிராக” (Against Heresies) என்னும் இறையியல் நூல்தான். இந்த நூலில்தான் இவரது மரியியல் கருத்துகளும் உள்ளன.

பவுல் உரோமையருக்கு எழுதிய திருமடலின் ஐந்தாம் அதிகாரத்தைப் பின்பற்றி, இயேசு “புதிய ஆதாம்” என நிறுவினார் ஐரனேயஸ். “ஒரு மனிதன் (ஆதாம்) வழியாய்ப் பாவம் இந்த உலகத்தில் நுழைந்தது. அந்தப் பாவத்தின் வழியாய்ச் சாவு வந்தது” (உரோ 5:12). “ஒருவரின் (இயேசு) கீழ்ப்படிதலால் பலர் கடவுளுக்கு ஏற்புடையவர்கள் ஆவார்கள்” (உரோ 5:19). “இந்த ஆதாம் வரவிருக்கிறவருக்கு (இயேசு) முன்னடையாளமாய் இருக்கிறார்” (உரோ 5:14) என்று பவுல் தமது கிறிஸ்தியல் உண்மைகளைப் பதிவுசெய்துள்ளார்.

இந்த இறையியல் செய்தியைப் பின்புலமாகக் கொண்டு, “தப்பறைகளுக்கு எதிராக” நூலில் ஏவாளுக்கும், மரியாவுக்கும் உள்ள ஒற்றுமை, வேற்றுமைகளை விவரிக்கிறார் புனித ஐரனேயஸ். ஏவாளின் கீழ்ப்படியாமையால் பாவம் நுழைந்தது என்றும், மரியாவின் கீழ்ப்படிதலால் அவருக்கும், மனுக்குலத்திற்கும் மீட்பு கிடைத்தது என்றும் இன்று நாம் பேசுகின்ற மரியியல் செய்தியை முதன் முதலில் ஐரனேயஸ்தான் எழுதினார்.

ஐரனேயசின் எழுத்துகள் ஏற்படுத்திய தாக்கத்தால்தான் மிலான் நகர் புனித அம்புரோஸ், தெர்த்துல்லியன் இருவரும் மரியியல் உண்மைகளைப் பெரிதும் எழுதினர். அன்னை மரியா அமல உற்பவி, சென்மப் பாவமின்றிப் பிறந்தவர் என்னும் நம்பிக்கை உண்மை (dogma) திருத்தந்தை ஒன்பதாம் பயஸ் அவர்களால் 1854ஆம் ஆண்டு; அறிவிக்கப்பட்டது. அந்த மடலில் திருத்தந்தை ஐரனேயசின் கருத்துகளையும் மேற்கோள் காட்டினார் என்பது ஐரனேயசுக்குத் தரப்பட்ட மிகப் பெரிய ஏற்பிசைவு.

இரண்டாம் நூற்றாண்டில் இறைவார்த்தை என்னும் பெயரில் பரவிக்கிடந்த பல நூல்களில் நாம் புதிய ஏற்பாடு என்று அழைக்கும் 27 நூல்களையும் இறுதி செய்வதில் ஐரனேயசுக்குப் பெரும் பங்கு இருந்தது.

ஐரனேயசின் பிறந்த ஆண்டு தெரியவில்லை. அனேகமாக கி.பி. 120-130க்குள் பிறந்திருக்கலாம் என்று சொல்லப்படுகிறது. இரண்டாம் நூற்றாண்டின் தொடக்க காலத்தில் பிறந்த இவர், கி.பி. 202ஆம் ஆண்டு மறைசாட்சியாக இறந்தார்.

ஐரனேயசை புனிதராகக் கத்தோலிக்கத் திருச்சபை, கீழை ஆர்த்தடாக்ஸ் திருச்சபை, லூத்தரன் சபை மூன்றும் ஏற்றுக்கொள்கின்றன. இவரது விழாவை ஜூன் 28ல் கொண்டாடுகிறோம். புனித ஐரனேயசின் எடுத்துக்காட்டை நாமும் பின்பற்றி மரியாவின் அன்புப் பிள்ளைகளாக வாழ்வோமாக!



அருள்பணி. குமார்ராஜா



மாதந்தோறும் மரியாள் : 9

# வியாகுல அன்னை



துன்பங்களில் நம் எல்லாருக்கும் எடுத்துக் காட்டு வியாகுல அன்னை.

நம்மைப் போன்று ஒரு சாதாரணக் குடும்பப் பெண்ணாகிய மரியாள் குடும்பத்தில் இன்று நாம் எதிர்கொள்ளும் அனைத்தையும் அனுபவித்தவர்.

உமது உள்ளத்தை ஒரு வாள் ஊடுருவும் என்ற சிமியோனின் வாக்கு (லூக் 2:35 அவர் இயேசுவைக் கருத்தாங்கிய நாளிலே தொடங்கி விட்டது. அது இயேசுவின் கல்வாரிப் பலியிலும், இயேசுவின் விண்ணேற்றத்திற்குப் பின்பும் தொடர்ந்தது. குழப்பமான சூழ்நிலைகள் பலவற்றை தாய் மரியாள் தன் வாழ்வில் சந்தித்தார்.

வாழ்வின் இந்தக் குழப்பமான, துன்பமான சூழ்நிலைகளில் நாம் மரியாளிடமிருந்து கற்றுக் கொள்ள ஏராளமான பாடங்கள் உள்ளது. ஏழு வியாகுலங்களின் தாய் நமக்கு ஏழு படிப்பினைகளைக் கற்றுத் தருகிறார்.

1. துன்பம் மீட்பின் மறைபொருள். நமது துன்பத்திற்காக காரணம் ஒருவேளை நமக்கு நாம் துன்பப்பட்டுக்

கொண்டிருக்கும்போது வெளிப்படையாகத் தெரியாமல் இருக்கலாம். ஆனால் அதுவே நம்மை மீட்கும் ஆயுதம்.

2. துன்பத்தில் தான் மரியாள் தனது சீடத்துவத்தை நிறைவு செய்தார். நாம் இயேசுவின் உண்மையான சீடர்கள் என்றால் அன்றாடம் அன்னை மரியாள் போன்று நம் துன்பச் சிலுவைகளை மனத் துணிவுடன் உள்ளார்ந்த விருப்பத்துடன் தூக்கிக் கொண்டு அவர் பின் செல்ல வேண்டும்.

3. நாம் சந்திக்கும் ஒவ்வொரு வேதனையும் கிறிஸ்துவின் பாடுகளில் நாம் பங்கெடுப்பதற்கு கடவுள் நமக்கு கொடுத்திருக்கும் வாய்ப்பாக உணர்வோம். அவரது பாடுகளில் குறைவானதை நாம் நிறைவு செய்கிறோம் (கொலோ 1:24) என்ற உணர்வைப் பெற்றுக் கொள்வோம்.

4. சிலுவையடியில் நிற்கும் துணிவை ஆண்டவர் மரியாளுக்குக் கொடுத்தது போல் துன்பங்களைச் சந்திக்கும், ஏற்றுக் கொள்ளும் மனத் துணிவை நமக்கும் கொடுத்துள்ளார் என்பதை உணர்ந்து முழுத் துணிவுடன் துன்பங்களை எதிர் கொள்வோம்.

5. எனக்குத் துன்பம் விளைந்தது எனது நன்மைக்காகவே. அதனால் உம் விதி முறைகளை நான் கற்றுக் கொண்டேன் (திபா 11971) என்ற திருப்பாடல் ஆசிரியரின் நேர் நிலை மனநிலையை நாம் பெற்றுக் கொள்வோம்.

6. அன்னை மரியின் அடிச் சுவடுகளைப் பின்பற்றி வாழ்ந்து, செப்டம்பர் 4ஆம் தேதி புனிதர் பட்டம் பெற்றுள்ள அன்னை தெரசாள் போல, பிறர் நலனுக்காகத் துன்பங்களைத் தாங்கும் பேறு பெற்றவர்களாக வாழ்வோம். பிறரின் துன்பங்களில் நாம் பங்கெடுப்பதால், நம் சுமைகளைச் சுமகக் வலிமை பெறுகிறோம். பிறர் வாழ்வுக்கு அர்த்தம் கொடுப்பதால் நம் வாழ்வுக்கு அர்த்தம் கிடைக்கின்றது.

7. துன்பம் நம்மைத் தூய்மைப்படுத்துகிறது. நமது விசுவாசத்தை ஆழப்படுத்துகிறது. ஆண்டவர் என் துன்பத்தைக் களிநடனமாக மாற்றுவார் என்ற எதிர்நோக்கை நமக்குள் விதைக்கிறது. இறைப்பராமரிப்பின் இளைப்பாறுதலை நமக்கு வழங்குகிறது. ஒட்டுமொத்தத்தில் நமது ஆன்மீக வாழ்வில் பால்குடி மகவாக இருக்கும் நம்மை திட உணவு உட்கொள்ளும் நிலைக்கு வளர்ச்சியடையச் செய்கிறது.

மரியாள் தனது ஏழு துயர்களின் வழி நமக்குக் கற்றுத்தரும் இந்த வாழ்க்கைப் பாடங்களை நாம் பின்பற்றி அவர் வழி நடப்போம். ஆண்டவரின் ஆசீர் உங்களோடு இருப்பதாக.



**அருள்பணி. பென்சிகர் லூசன்**

**17.04.2021 சனி**

**காலை 12.30 முதல் 03.00 வரை**

**மூன்றாம் சனி பரிந்துரை வழிபாடு**

**“தேர்வு எழுதும் மாணவ, மாணவியருக்காக”**

**ஒப்புக்கொடுக்கப்படும்.**

**தங்கள் குழந்தைகளின் படிப்பு, தேர்வு, எதிர்காலம் ஆசிர்வதிக்கப்படுவதற்காக செபிக்க விரும்புகிறவர்கள் அவர்களின் பெயரை பங்குத் தந்தையிடம் நேரிலோ, அல்லது வாட்ஸ்அப் (82209 47823) வழியாகவோ தெரிவிக்கலாம்.**





# விவிலியப் போட்டி 75

தயாரித்தவர் : சகோ. பிரகாசி FBS

## கொரிந்தியர் முதல் திருமுகம்

கோடிட்ட இடத்தை நிரப்புக. விடைகளில் அதிகாரம், வசனம் எழுதவும்.

1. ____________ நமக்கு மட்டும் அல்ல, அனைவருக்கும் ஆண்டவர்.
2. இறந்த கிறிஸ்து ____________ என அறிவிக்கப்பட்டிருக்க,
3. ____________ அன்பர்களே, இறைவாக்கு உரைக்க ஆர்வமாய் நாடுங்கள்.
4. உலகம், வாழ்வு, ____________, நிகழ்காலம், எதிர்காலம் இவை அனைத்தும்
5. அதனால் பாம்பினால் கடிபட்டு ____________ போயினர்.
6. சாவே, உன் ____________ எங்கே? சாவே உன் கொடுக்கு எங்கே?‘
7. ‘சாவு முற்றிலும் ஒழிந்தது; வெற்றி ____________
8. அக்காயிக்கு ஆகியோர் வந்ததில் எனக்கு ____________.
9. கடவுளின் வார்த்தை உங்களிடமிருந்தா ____________ ?

**விடைகள் அனைத்தையும் கோர்த்தால், உங்களுக்கான உயிர்ப்பின் செய்தி கிடைக்கும்.**

**விடைகளை வாட்ஸ்அப்பிலும் அனுப்பலாம் : 90920 55199 (அருள்பணி. ஸ்டார்லின்)**

**விடைகள் வந்து சேரவேண்டிய கடைசி நாள் : 15.04.2021**

**பேராலயப் பங்கைச் சேர்ந்தவர்கள் அன்பியப் பெயரையும் எழுதுங்கள்.**

# விவிலியப் போட்டி 74

## மார்ச் 2021 — விடைக்குறிப்புகள்

### எபிரேயர் திருமடல்

| | | |
|---|---|---|
| 1. | எபிரேயர்-13:8 | இயேசு கிறிஸ்து |
| 2. | எபிரேயர்-11:40 | நமக்காகச் |
| 3. | எபிரேயர்-6:6 | சிலுவையில் |
| 4. | எபிரேயர்-9:22 | இரத்தம் |
| 5. | எபிரேயர்-10:20 | சிந்தி |
| 6. | எபிரேயர்-9:28 | மீட்பு |
| 7. | எபிரேயர்-10:18 | பாவமன்னிப்பு |
| 8. | எபிரேயர்-13:23 | விடுதலை |
| 9. | எபிரேயர்-5:5 | அளித்தார். |

*இம்மாதச் செய்தி:*

**“இயேசுகிறிஸ்து நமக்காக சிலுவையில் இரத்தம் சிந்தி மீட்பு, மன்னிப்பு, விடுதலை அளித்தார்.”**

**விடை அனுப்பியவர்கள் மொத்தம் : 203**

**I. பனிமய மாதா பேராலய அன்பியங்களிலிருந்து சரியான விடை எழுதியவர்கள் : 106**

**விடை எழுதிய அன்பியங்கள் (27)**

**பரிசு பெறுபவர்கள் : 4**

1. **டோனி ஆஷா,** அந்தோனியார் அன்பியம்
2. **S. ரெய்ஸா சுஜய்,** அன்னை தெரசா அன்பியம்
3. **டென்ஸி லோபோ,** அன்னை வேளாங்கண்ணி அன்பியம்
4. **R. லூரட் வசந்த்,** கிறிஸ்து அரசர் அன்பியம்

(உதவிய இறைமொழி: எபேசியர்-1:7: கிறிஸ்து இரத்தம் சிந்தி தம் அருள்வளத்திற்கு ஏற்ப நமக்கு மீட்பு அளித்துள்ளார்; இம்மீட்பால் குற்றங்களிலிருந்து நாம் மன்னிப்புப் பெறுகிறோம்.)



## பாராட்டுக்குரியவர்கள் : 102

**1. அந்தோனியார் அன்பியம் (7)**

R. ஜெயா — ரீனா மொராய்ஸ்
சார்லஸ் பிருந்தா — ரா. ஸ்டீபன்
ஜெஸி — டியான்ட்ரா
ஸ். ஆட்லினோ

**2. அன்னை தெரசா அன்பியம் (2)**

லிசி அண்டோ — ரோபினா

**3. அன்னை வேளாங்கண்ணி அன்பியம் (4)**

P. மெடோனா ஜோசப் — D. திவ்யா
S. ஜெனிஷா — லிசியா ஜெகதீஸ்

**4. கிறிஸ்து அரசர் அன்பியம் (3)**

A.S. செலஸ்கி கிளமெண்ட்
S. ரொசாரியோ பிளம்மிங்
ச. ராஜா ஜரின்

**5. தஸ்நேவிஸ் மாதா அன்பியம் (6)**

இருதயம்மாள் — பிருந்தா திவான்
ஸ்டெனிஸ் திவாஸ் — லைரோஸ்
பெர்னார்டு கார்லஸ் — ரதராணி

**6. திவ்யபாலன் அன்பியம் (6)**

வென்சிலா சகாயராஜ் — சகாய ராணி தனராஜ்
ரொமிலா ரோச் — சே .பிரின்ஸி
சுமி ஜாண்சன் — ஏஞ்சல்

**7. பாத்திமா மாதா அன்பியம் (2)**

மு. ஜெஸிந்தா கான்ஸ்டன்
மார்த்தாள் தீத்தோணிஸ்

**8. இரக்கத்தின் மாதா அன்பியம் (3)**

கெனிட்டா — சித்ரா மோத்தா
பிரைட்டன் ஜெரோபின்

**9. ஜெபமாலை மாதா அன்பியம் (6)**

டிரைபேனா கிரேண்டின் — செல்வாராஜ்
B. பிளஸிலா இருதயராஜ் — ஸ்மைலா டிஃபானி
சகாயம்மாள் பெனடிக்ட் — J. பிரிஜிட்

**10. காவல் தூதர் அன்பியம் (6)**

S. ஆரோக்கிய டெய்சி — தா. வெனிட்டாள்
ஜெயா அகஸ்டின் — A. ஜோனத்தன்
A. ஹசீனா — E. ஜோ ட்ரினிலேட்

**11. குழந்தை இயேசு அன்பியம் (4)**

S. லியாண்டின் சஹானா — அ. எமல்டா
J. பிரிஜிட் — ரதி பிரதீப்

**12. லூர்து மாதா அன்பியம் (4)**

ஜெனோ சேவியர் — ஆலிவர் ஜெனோரா
மேரி ஆனி — சோனி சாஜி

**13. மணல் மாதா அன்பியம் (3)**

ஹெபிட்டா — ஜெயந்தி
ரோசாரி கோமஸ்

**14. மிக்கேல் அதிதூதர் அன்பியம் (3)**

ஐன்ஸ்டன் பெனோ — ஆந்தோனி வினோ
மோ. இன்பெண்ட் ஜோஸ்னா

**15. பனிமய மாதா அன்பியம் (1)**

லூடா கான்ஸ்டன்

**16. பரிபூரண மாதா அன்பியம் (6)**

ஜெனிஷா — மெடோனா
J. ஷர்மிளா — கினிஸ்டன் சப்னா
வின்செென்ட் ரோசிட்டா

**17. பவுலடியார் அன்பியம் (2)**

A. லீமா ஜாய் — B. ரோஸ்லின் ராஜா

**18. பொம்பெய் மாதா அன்பியம் (6)**

மேத்யூ கர்டோசா — எல்ஃபி அண்டோ
கேத்ரின் தோமஸ் — அனிஷா கொரைரா
ஹெரிங்டன் — ஷெர்பா

**19. இராயப்பர் அன்பியம் (4)**

S. டெய்சி அண்டோ மோத்தா
இந்திரா ரெஃப்லின் மிசியர்
சுமதி ஜெயபால் — ரெனோ போஸ்கோ

**20. சவேரியார் அன்பியம் (8)**

மெர்லின் — தி. ஆக்னஸ்
டெலிலா — ஜோர்னல் ஜென்ஸி
ஸ்டெல்லா பிரான்சிஸ் — ஜான்சி
பிரின்ஸி ஆக்னல் — அண்டன் சகாயம்

**21. செபஸ்தியார் அன்பியம் (4)**

D.அந்தோனியம்மாள் டென்சிங்
மா.போ. ஆன்சலம் ஜோ ஆனல்
அனிஷ் ரஞ்சி ஜீடியா — ஆல்ட்ரிச்

**22. சிந்தாத்திரை மாதா அன்பியம் (2)**

நேசம் — D.J. P.R.ராயன்

**23. சிறுமலர் அன்பியம் (5)**

எல்சிட்டா ஆனந்தன் — A.S.செலஸ்டின்
விஜி சகாயராஜ் — ஜோசப் விராயர்
ஓஃபிலியா தாமஸ் கொறைரா

**24. சூசையப்பர் அன்பியம் (4)**

ரூபி கொர்னலியுஸ் — V. ரீஜோ
சாகயராணி சில்வெஸ்டர் — J. மென்ஸி

**25. திருச்சிலுவை அன்பியம் (3)**

கில்டன் சரோலின் — ரமணி தாஸ்
ஜெஸிக்கா அலெக்ஸ்

**26. ஜீடு அன்பியம் (3)**

அந்தோனி சாமி — ஆக்னல்
மேக்லிட்டா

**27. குழந்தை தெரசா (2)**

லூர்து லினெட் — பியர்லி டென்சன்





## II. இதர பங்குகளிலிருந்து விடை அனுப்பியவர்கள் : 97

### பரிசு பெறுபவர்கள் : 4

1. **A. குழந்தை தெரஸ்,** பெரியகுளம்
2. **A. மோனிட்டா கிறிஸ்டி,** திருச்சி
3. **சரோபின் ஜோசப்,** கோவளம்
4. **A. மரிய மதலேன்,** முத்தழகுபட்டி

### பாராட்டுக்குரியவர்கள் : 93

**தூத்துக்குடி** (58)

T. மேத்யு சுசேதா, மென்சிலா லொயோலா, A. ப்ரங்கா அகிலன், பிலோ சாண்ட்ரியா, P. ஜீலியட் வாஸ், விஜியா பர்னாந்து, சாந்தினி, C.T. ஆசீர்வாதம், S. குழந்தை தெரசா, சகாயட்டா மச்சாது, A.S. செலஸ்டின், P. ரிமோல்டா, P. ரமோலா கமிலஸ், கோவில்ராஜ், S. வெர்ஜின் சகாயராஜ் ஆஸ்மின், J. பெனிட், ஜான்ஸி மென்டிஸ், J. ஆஸ்மின், ரேணு முறாயிஸ், C. செரினா, ரோஸ் சேவியர், வால்டர், A. ஜோஸ்பினா, P. பவித்ரா, செபஸ்டின் லடிஸ், P. ஸ்டெல்லா, ரோஸ் சேவியர், வேன்ஸி பிரின்ஸ், ஜெஸிந்தா, ஜீடி கஜேந்திரன், T. மேத்யூ சுசேதா, மேத்யூ விவேக், டெல்பின் கார்மல், சகாயராஜ் ரொட்ரீக்ஸ், ரமேஷ் நர்மதா, F. ரேணு முறாயிஸ், பிலஸிலா இருதயராஜ்,பிளாசி செல்வராஜ், பி. ஜீலியட் வாஸ், சாந்தினி, பேபி வால்டர், குணசீலி அப்பாதுரை, J. மெடோனா ஜீடு, சோபியா விஜய், வெர்ஜின் சகாயராஜ், செ. ஜெபிசியா செ.செல்சியா, அபிஷா, ஜாக்சன், ஜெனோபியா, ரமேஷ் நர்மதா, ஜெஸிந்தா பர்னாந்து, ம. ஜான்ஸி மென்டிஸ், ஜெர்லின் ஜெப்ரி, பெ. ஜெரோனிஷா, J. கோல்வின் சேசுராஜ், A. ஜோஸ்பினா பர்னாந்து, J. சுகிர்தா.

**மும்பை** : மேரி எமிலின் (1)

**திருவனந்தபுரம்** : ஜோஸ்பின் (1)

**கோழிக்கூடு** : மரிய ரீஜா (1)

**சென்னை** : கமலஜோதி ஜெயசீலன், சகாயராணி இம்மானுவேல், உமா கில்பர்ட், லூசியா ஜீடிக்ஸ் (4)

**திருப்பூர்** : பிரான்சிஸ் ஆர்லன் (1)

**மதுரை** : ஜோசப் ராஜா மாணிக்கம், இருதயராஜ் (2)

**திருச்சி** : A. மேத்யூ விவேக், A. மோனிட்டா கிறிஸ்டி, A. ஜான்சி ராணி, லா. ஸ்டெல்லா, ஜான்சி ராணி (5)

**பெரியகுளம்** : A. குழந்தை தெரஸ் (1)

**முத்தழகுபட்டி** : ஜெர்மேன், ரோசாலி, A. மரிய மதலேன் (3)

**கயத்தாறு** : அமல்ராஜ், அமல்ராஜ் ரத்தினம் (2)

**உடன்குடி** : M.A. சிலுவை அருள் (1)

**வீரக்குறிச்சி** : A. ரோஸ் மேரி (1)

**வேம்பார்** : ச. மகிழினி (1)

**பெரியகுளம்** : A. குழந்தை தெரஸ் (1)

**ஆலந்தலை** : ஜெயட்டன் சுதா, பொன்சேகா, T. சுபாஸ் பர்னாந்து (3)

**சேதுக்கு வாய்த்தான்** : ஜனதா பாப்பா (1)

**குரும்பூர்** : சுபா டெரன்ஸ் (1)

**புதியம்புத்தூர்** : ஹெலன் அன்னமணி (1)

**திருநெல்வேலி** : குணசீலன் (1)

**திருக்கழுக்குன்றம்** : Sr. லெத்திஸியா (1)

**சி. சவேரியார்புரம்** : ஐஸ்வர்யா (1)

**கோவளம்** : சரோபின் ஜோசப் (1)

### கடந்த மாதம் சரியான விடை எழுதியவர்கள் : 229



### இந்த மாதம் சரியான விடை எழுதியவர்கள் : 203



பனிமயத்தாயின்
பிள்ளைகள்
அனைவருக்கும்
உயிர்ப்புத்
திருவிழா
வாழ்த்துகள்!

**மாதம் ஒரு மாதா படம் : 19**

# அரவணைக்கும் தாய்



**R. JOAN,**
அந்தோனியார் அன்பியம்





# பனிமயப் பகிர்வு

(பேராலயப் பங்கு மக்களுக்கான மடல் - 21)

## ஏப்ரல் - 2021

| | | | |
|---|---|---|---|
| அதிபர் & பங்குத் தந்தை | : | **அருள்முனைவர் குமார்ராஜா** | 94431 47823 |
| உதவிப் பங்குத் தந்தை | : | **அருள்பணி ஸ்டார்லின்** | 90920 55199 |
| பங்கு அலுவலகம் | : | | 2320854 |
| பங்கு அலுவலக வாட்ஸ் அப் | : | | 82209 47823 |

## திருவழிபாட்டு நேரங்கள்

| **தினசரி திருப்பலிகள்** | | **சனிக் கிழமைகளில்** | | **ஞாயிற்றுக் கிழமைகளில்** | |
|---|---|---|---|---|---|
| காலை | 5.30, 6.30 | காலை 5.30, 6.30 | திருப்பலி | **காலை 5.00, 6.30, 8.00** | திருப்பலி |
| மாலை | 5.30 | காலை 11.00 | செபமாலை, **நவநாள் திருப்பலி** | **காலை 9.30** | ஆங்கிலத் திருப்பலி |
| | | மாலை 5.30 | திருப்பலி | **மாலை 5.30** | திருப்பலி |
| | | மாலை 6.30 | நவநாள், நற்கருணை ஆசீர் | **மாலை 6.30** | நற்கருணை ஆசீர் |

**ஒப்புரவு அருள்சாதனம்** *தினமும் மாலை 06.00 - 06.30*
*சனிக்கிழமைகளில் மாலை 05.30 - 07.00*

- ✓ *திருமுழுக்கு - ஞாயிற்றுக்கிழமைகளில் காலை 10.30 (தவக்காலத்தில் திருமுழுக்கு வழங்கப்பட மாட்டாது)*
- ✓ *புதுநன்மை - புதன், சனி, ஞாயிறுகளில் (தவக்காலம், ஆகஸ்ட் மாதம் முழுவதும் மற்றும் மாதத்தின் முதல் சனி மாலை தவிர).*
- ✓ *திருமணம் - பேராலய மரபுப்படி, சனி, ஞாயிற்றுக் கிழமைகளில் திருமணம் நடைபெறுவதில்லை. பேராலயப் பங்கினருக்கு மட்டும் ஞாயிறு காலை 11.00. திருவருகைக் காலத்திலும், தவக்காலத்திலும் திருமணம் நடைபெறாது.*
- ✓ *ஞாயிறு மறைக்கல்வி : ஞாயிறு காலை 10.30 - 11.30*
- ✓ *பனிமய மாணவர் கூட்டம் : ஞாயிறு காலை 11.30 - 12.30*
- ✓ *திறன் பயிற்சி வகுப்புகள் : ஞாயிறு மாலை 04.30 - 06.00*
- ✓ *பரிந்துரை மன்றாட்டு : திங்கள் மாலை 06.15 - 06.45*
- ✓ *விவிலியப் பாசறை : ஞாயிறு மாலை 03.00 - 05.00*
  *செவ்வாய் மாலை 06.15 - 08.15*
- ✓ *அன்பியக் கூட்டங்கள் : புதன், வியாழக்கிழமைகளில்*
- ✓ *உறுதிப்பூசுதல் அருள்சாதனம் : 30.05.2021*
- ✓ *புதுநன்மை அருள்சாதனம் : 01.08.2021*
  *பெறவிரும்புவோர் குடும்ப அட்டையுடன் பங்கு அலுவலகத்தில் பதிவு செய்யவும். அதற்கான ஞாயிறு மறைக்கல்வியில் தவறாது கலந்துகொள்ளவும்.*

- ✓ **பங்குத்தந்தையரைச் சந்திக்கும் நேரம்** : *காலை 10.00 மணி - 01.00 மணி*
  *மாலை 04.00 மணி - 05.30 மணி*
- ✓ *இல்லம் மந்திரித்தல், வாகன மந்திரிப்பு போன்றவற்றுக்கு முன்கூட்டியே அலைபேசியில் தகவல் தந்தபின் வந்தால் காத்திருத்தலை, தாமதத்தைத் தவிர்க்கலாம்.*
- ✓ *நோயில்பூசுதல் மற்றும் தவிர்க்க இயலாத அவசரப் பணிகளுக்கு எந்த நேரமும் தொடர்பு கொள்ளலாம். அலைபேசியில் பேசாமல், நேரிலே வந்துவிடுங்கள்.*



## பனிமயச் சுவடுகள்

### (பங்கின் முக்கிய நிகழ்வுகளின் தொகுப்பு)

206. பேராலயப் பங்குத் தந்தையருக்கு சமையலராக 12 ஆண்டுகளுக்கும் மேலாகப் பணியாற்றிய செல்வி. அந்தோனியம்மாளின் அடக்கத் திருப்பலி **23.02.2021 செவ்வாய்** நடைபெற்றது. 22 அருள்பணியாளர்கள் கலந்துகொண்டனர். அடக்கச் செலவுகளைப் பேராலயமே ஏற்றுக்கொண்டது.

207. மறைமாவட்ட ஆயர் மேதகு ஸ்டீபன் ஆண்டகையின் திருநிலைப்பாட்டு இரண்டாம் ஆண்டு நிறைவு நன்றித் திருப்பலி 24.02.2021 புதன் மாலை திரு இதயங்களின் பேராலயத்தில் நடைபெற்றது. அதில் மறைமாவட்ட நூற்றாண்டு விழாவையொட்டி ஏழைகளுக்குக் கட்டித் தரப்படவிருக்கும் 100 வீடுகள் திட்டத்திற்காக ரூ. 25,00,000 (25 இலட்சம்) நன்கொடையாக ஆயர் அவர்களிடம் வழங்கப்பட்டது.

208. **பனிமயப் பாசறை:** “கோபத்தை மேற்கொள்வோம்” என்னும் தலைப்பில் 01.03.2021 திங்கள் மாலை (27 பேர்), 07.03.2021 ஞாயிறு மாலை (17 பேர்) ஆகிய 2 நாள்கள் நடைபெற்றது. மொத்தம் **44** பேர் கலந்துகொண்டனர்.

209. தவக்காலத்தை முன்னிட்டுத் **திருச்சிலுவை சிற்றாலயத்தில்** “தலையான பாவங்கள்” என்னும் தலைப்பின்கீழ் 02.03.2021, 09.03.2021, 16.03.2021, 23.03.2021, 30.03.2021 ஆகிய செவ்வாய்க்கிழமைகளில் பகல் 12.30 முதல் மாலை 04.00 வரை நலம் தரும் நற்செய்தி வழிபாடு நடைபெற்றது. அருள்பணியாளர்கள் ரெயோசில் பெப்பி, கிராசிஸ் மைக்கேல், ஜோசப், ஜெரால்ட் ரவி, மார்ட்டின்குமார் ஆகியோர் தவக்காலச் செய்தி வழங்கினார்கள்.

210. நமது பங்கிலிருந்து **தவக்காலத் திருப்பயணமாக** தூத்துக்குடி, கோட்டாறு மறைமாவட்டங்களின் கோவில்களுக்கு 07.03.2021 அன்று மூன்று பேருந்துகளில் 162 பேர் சென்று வந்தனர். உதவிப் பங்குத் தந்தை அருள்பணி. ஸ்டார்லின் அவர்களின் சொந்த ஊரான வண்டாலம் புனித சூசையப்பர் கோவிலில் திருப்பலியுடன் பயணம் நிறைவு பெற்றது.

211. பங்கு மக்களுக்கான ஒருநாள் தியானம் **14.03.2021** ஞாயிறு அன்று மங்கலகிரி, டிவைன் மெர்சி தியான இல்லத்தில் நடைபெற்றது. அருள்பணி. இராயப்பன் வழிநடத்திய இத்தியானத்தில் பங்கு மக்கள் 125 பேர் கலந்துகொண்டனர்.

212. மார்ச் மாத **மூன்றாம் சனி சிறப்பு வழிபாடு (5)** 20.03.2021 சனி அன்று காலை 12.30 முதல் பிற்பகல் 03.00 வரை நடைபெற்றது. “தொழில் முன்னேற்றத்திற்காக” நடைபெற்ற இந்தப் பரிந்துரை வழிபாட்டில் **52** குடும்பங்களின் / நிறுவனங்களின் கருத்துகளுக்காக மன்றாட்டுகள் ஏறெடுக்கப்பட்டன.

213. தவக்கால விவிலிய வாசிப்பின் அடையாளமாக எசாயா இறைவாக்கு நூலிலிருந்து விவிலிய எழுத்துப் போட்டி **21.03.2021** ஞாயிறு பிற்பகல் 03.00 மணிக்கு அந்தோனியார் அரங்கத்தில் நடைபெற்றது. **42** பேர் ஆர்வத்துடன் கலந்துகொண்டனர்.

214. பங்கு மக்களுக்கான குறுந்தியானம் **28.03.2021 குருத்து ஞாயிறு** அன்று திருச்சிலுவை சிற்றாலயத்தில் காலை 11.00 முதல் 03.00 வரை நடைபெற்றது. அருள்பணி. ஜூலியன்ஸ் வழிநடத்திய இத்தியானத்தில் பங்கு மக்கள் திரளாகக் கலந்துகொண்டனர்.



## பங்கில் நிகழ்ந்தவை

### *செபிக்கின்றோம்*

### இறைவனில் இளைப்பாறியவர்கள்

| எண் | பெயர் | கணவர் / மனைவி | இறந்தநாள் | அன்பியம் |
|---|---|---|---|---|
| 82. | மரியமகேந்திரன் | ஹெலன் | 25-02-2021 | செபஸ்தியார் |
| 83. | லூக்காஸ் | பிராங்லின் | 25-02-2021 | கிறிஸ்தரசர் |
| 84. | அந்தோணி | மரியாள் | 27-02-2021 | அன்னை வேளாங்கன்னி |
| 85. | அருள்சீலி | அந்தோணிசாமி | 12-03-2021 | திருச்சிலுவை |

## பங்கில் நிகழவிருப்பவை

- **01.04.2021 பெரிய வியாழன்** மாலையில் சிறப்பு வழிபாடும், நள்ளிரவில் நகரைச் சுற்றிப் பெரிய சிலுவைப் பாதையும் நடைபெறும்.
- **02.04.2021 பெரிய வெள்ளி** பகலில் அமைதியில் ஆராதனையும், மாலையில் திருச்சிலுவை வழிபாடும் நடைபெறும்.
- **03.04.2021 பெரிய சனி** அன்று பங்கின் நோயாளர்கள், முதியோருக்கு நற்கருணை வழங்கப்படும். (அன்று முதல் சனி நவநாள், சப்பரப் பவனி நடைபெறாது).
- **04.04.2021 உயிர்ப்பு ஞாயிறு** அன்று காலை 06.30 திருப்பலியை நமது ஆயர் மேதகு ஸ்டீபன் ஆண்டகை அவர்கள் நிறைவேற்றி, பங்கின் புதிய திட்டங்களைத் தொடங்கிவைப்பார்கள்.
- **07.04.2021** மாதத்தின் முதல் புதன் அன்று மாலைத் திருப்பலி முடிந்ததும் **புனித சூசையப்பர் சிறப்பு வணக்க வழிபாடு** நடைபெறும்.
- **05.04.2021** திங்கள் (மாலை 06.15), **11.04.2021 ஞாயிறு** (மாலை 03.00) ஆகிய இரு நாள்களும் ஏப்ரல் மாதத்துக்கான **விவிலியப் பாசறை "திருத்தூதர் பணிகள் நூல்"** என்னும் தலைப்பில் நடைபெறும்.
- **17.04.2021** சனி காலை 12.30 முதல் 03.00 வரை **மூன்றாம் சனி பரிந்துரை வழிபாடு** "தேர்வு எழுதும் மாணவ, மாணவியருக்காக" ஒப்புக்கொடுக்கப்படும். தங்கள் குழந்தைகளின் படிப்பு, தேர்வு, எதிர்காலம் ஆசிர்வதிக்கப்படுவதற்காக செபிக்க விரும்புகிறவர்கள் அவர்களின் பெயரை பங்குத் தந்தையிடம் நேரிலோ, அல்லது வாட்ஸ்அப் (82209 47823) வழியாகவோ தெரிவிக்கலாம்.
- நமது பங்கின் விடுமுறை விவிலியப் பள்ளி 30.04.2021 வெள்ளி முதல் 09.05.2021 ஞாயிறு வரை 10 நாள்கள் நடைபெறும்..

### திருச்சிலுவைச் சிற்றாலயத்தில்...

- ஒவ்வொரு வெள்ளியும் - நண்பகல் 12.00 மணிக்கு இறைவேண்டலும், தொடர்ந்து திருச்சிலுவை அன்பு உணவும்.
- ஒவ்வொரு செவ்வாயும் - பகல் 12.30 முதல் 04.00 மணி வரை நலம் தரும் நற்செய்தி அறிவிப்பு, குணமளிக்கும் நற்கருணை ஆசிர், திருப்பலியும் நடைபெறும்.

| எண். | நாள் | கிழமை | செய்தியாளர் |
|---|---|---|---|
| 54 | 13.04.2021 | செவ்வாய் | அருள்பணி. கிராசிஸ் மைக்கேல் |
| 55 | 20.04.2021 | செவ்வாய் | அருள்பணி. ஜெரால்ட் ரவி |
| 56 | 27.04.2021 | செவ்வாய் | அருள்பணி. ரெயோசில் பெப்பி |

## புனித வார நிகழ்வுகள் 2021

**மார்ச் 28**
**குருத்து ஞாயிறு**



**5.00 மணி** : **முதல் திருப்பலி**

**6.15 மணி** : புனித சவேரியார் மண்டபத்தில் குருத்தோலை மந்திரிக்கப்பட்டு, குருத்தோலைப் பவனி பேராலயத்தை அடைந்தவுடன் **2-ஆம் திருப்பலி.**

**8.15 மணி** : **3-ஆம் திருப்பலி**

**9.30 மணி** : **ஆங்கிலத் திருப்பலி**

**11.00 முதல் 03.00 வரை** : **திருச்சிலுவைச் சிற்றாலயத்தில் நோன்புத் தியானம்**

**5.30 மணி** : **மாலைத் திருப்பலி** – திருப்பலி முடிந்ததும் ஒப்புரவு அருள்சாதன வழிபாடு

**மார்ச் 29**
**புனித வார திங்கள்**

**காலை 5.30, 6.30** : **திருப்பலி**

**மாலை 5.30** : **மாலைத் திருப்பலி** – திருப்பலி முடிந்ததும் ஒப்புரவு அருள்சாதன வழிபாடு

**மார்ச் 30**
**புனித வார செவ்வாய்**

**காலை 5.30, 6.30** : **திருப்பலி**

**மாலை 5.30 மணி** : **திருப்பலி நடைபெறாது.** அன்று திருஇருதயங்களின் பேராலயத்தில் திருத்தைல மந்திரிப்பு, **ஆயர் தலைமையில் கூட்டுத் திருப்பலி.**





**மார்ச் 31**
**புனித வார புதன்**

**காலை 5.30, 6.30 :** **திருப்பலி**

**மாலை 5.30 :** **மாலைத் திருப்பலி –** திருப்பலி முடிந்ததும் ஒப்புரவு அருள்சாதன வழிபாடு



**ஏப்ரல் 01**
**புனித வார வியாழன்**

**காலை 10.00 மணி முதல் 1.00 மணி வரை :** **ஒப்புரவு அருள்சாதனம்**

**மாலை 6.00 மணி :** **கூட்டுத் திருப்பலி.** பாதம் கழுவும் சடங்கு, முடிவில் திவ்ய நற்கருணை பவனி, தொடர்ந்து பேராலயத்தில் ஆராதனைகள். அட்டவணையில் குறிப்பிட்டவாறு நடைபெறும்.

**இரவு 12 மணி :** அமலோற்பவமாதா சபையினர் வழிநடத்தும் பொது சிலுவைப்பாதை நகர வீதிகளில் நடைபெறும்.



**ஏப்ரல் 02**
**புனித வெள்ளி**

**காலை 5.00 மணி முதல் மாலை 5.00 மணி வரை :** **நற்கருணை ஆராதனை**
மௌனமாகவும், குடும்பமாகவும் ஆராதனை செய்யலாம். அன்று ஒரு சந்தி, சுத்தபோசனம் அனுசரிக்க கடமை உண்டு.

**காலை 11.30 மணி :** கோவிலைச் சுற்றி **சிலுவைப்பாதை** நடைபெறும்.
அன்று திருச்சிலுவையை முத்தி செய்பவர்கள் பரிபூரண பலன் அடையலாம்.

**மாலை 6.00 மணி :** **திருப்பாடுகளின் வழிபாடு. திருச்சிலுவை ஆராதனை,**
நற்கருணை திருவிருந்து முடிவில் திருச்சிலுவை சிற்றாலயத்தில் ஆசந்தி சுரூபம் முத்தி செய்வதற்காக வைக்கப்படும்.



**ஏப்ரல் 03**
**புனித சனி**

**இரவு 11.00 மணி :** **திருவிழிப்பு வழிபாடு** பாஸ்கா புகழுரை, இறைவார்த்தை, திருமுழுக்கு வழிபாடு, திருமுழுக்கு நீர் மந்திரித்தல்.
அனைவரும் மெழுகுவர்த்தி கொண்டு வரவும்.

**ஏப்ரல் 04**
**உயிர்ப்பு பெருவிழா**



**காலை 6.30 மணி :** **மேதகு ஆயர் அவர்களால் சிறப்புத் திருப்பலி**

**8.30 மணி :** **இரண்டாவது திருப்பலி**

மாலை திருப்பலி நடைபெறாது.

**மாலை 6.30 மணி :** உயிர்த்த இயேசு திருவுருவ பவனியும் திவ்ய நற்கருணை ஆசீரும் நடைபெறும்.

# மூன்றாம் ஆண்டு நினைவஞ்சலி

"ஆண்டவர் தம் அன்பர்களின் சாவு
அவரது பார்வையில் மிக மதிப்பிற்குரியது."

(திபா 116:15)

பிறப்பு
13.06.1927



இறப்பு
13.04.2018

# C. லிட்வின் பர்னாந்து

**[W/o. கொலம்பஸ் பர்னாந்து (Late) ]**

*அன்புத் தாயை நினைவு கூரும்*

**மகன் : C. ஜோன்ஸ்**

**மற்றும்**

**குடும்பத்தினர்**

# இரண்டாம் வருட நினைவு

**"ஆண்டவரே என் ஆயர். எனக்கேதும் குறையில்லை."**

(திபா 23:1)



பிறப்பு
29.08.1981

இறப்பு
25.04.2019

# R. டில்சட் கொரைரா

**(Late) S/o. ரொசாரியோ கொரைரா**

எல்லையற்ற அன்பும் இரக்கமும் உள்ள இறைவா, உமது தயாளத்தை நினைவுகூர்ந்து உம்மை இவ்வுலகில் அன்பு செய்தவர்கள்மீதும் அன்பு செய்யாதவர்கள்மீதும் குருக்கள், கன்னியர்கள், உத்தரிக்கிற ஸ்தலத்தில் வேதனைப்படும் ஆன்மாக்கள், எங்கள் குடும்பத்தில் மரித்தவர்கள்மீதும் விசேஷமாக இரண்டாம் வருட நினைவு **R. டில்சட் கொரைரா** மீதும் உமது தயவைக் காண்பிக்க தயவாய் வேண்டுகிறோம். ஆமென்.

இவ்வான்ம இளைப்பாற்றிக்காக பர. அருள். திரி. மன்றாட அன்புடன் வேண்டுகிறோம்.

தாய் : **ஜெனட் மஸ்கரனாஸ்**
மனைவி : **T. ஆக்னஸ் Fdo**
மகன் : **D. சூசை ஆன்சன் கொரைரா**
**மற்றும் குடும்பமும் நட்பும்**

**திருப்பலி : 26.04.2021, காலை 6.30 மணி, பனிமய அன்னை பேராலயம், தூத்துக்குடி.**

15, சவேரியா பிச்சை சந்து,
பெரிய கோவில் காம்பவுண்ட்,
தூத்துக்குடி - 1.

SHINY Ph : 98421 31493